www.Padasalai.Net www.CBSEtips.in

KA

# அரையாண்டு பொதுத் தேர்வு - 2019

Reg.No

## ஒன்பதாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 100

பகுதி - I (மதிப்பெண்கள் 14)

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 14 x 1 = 14

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. "அதிரப் புகுதக் கனாக் கண்டேன்" - யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?
   அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்
   ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்
   இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்
   ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்
2. இந்திய தேசிய இராணுவம் ________ இன் தலைமையில் ________ உருவாக்கினர்.
   அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர் ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்
   இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்
3. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
   அ) திசைச்சொற்கள் ஆ) வட சொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்
4. செப்புத் திருமேனிகளின் பொற்காலம் ________ காலமாகும்.
   அ) சேரர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) பல்லவர்
5. 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ' எனப் பாடியவர் ________.
   அ) பெ. சுந்தரனார் ஆ) வெ. இராமலிங்கனார்
   இ) மகா வித்துவான் மீனாட்சி சுந்தரனார் ஈ) சேக்கிழார்
6. <u>பூவாது</u> காய்க்கும், <u>மலர்க்கை</u> - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
   அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
   இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை
7. வெறிகமழ் கழினியுள் உழுநர் வெள்ளமே - இப்படி உணர்த்தும் பொருள் யாது?
   அ) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்.
   ஆ) வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் அமர்ந்திருந்தனர்.
   இ) செறிவான வயலில் உழவர் வெள்ளமாய்க் கூடியிருந்தனர்.
   ஈ) பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்.
8. இளங்கமுகு, செய்கோலம் - இலக்கணக்குறிப்புத் தருக.
   அ) உருவகத் தொடர், வினைத்தொகை ஆ) பண்புத்தொகை, வினைத்தொகை
   இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) பண்புத்தொகை, உருவகத் தொடர்
9. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி
10. சீவகசிந்தாமணி நூலின் ஆசிரியர் ________.
    அ) தோலாமொழித்தேவர் ஆ) திருத்தக்க தேவர் இ) கம்பர் ஈ) இளங்கோவடிகள்
11. "டெல்லி நோக்கி செல்லுங்கள்" என்று போர் முழக்கம் செய்தவர் ________.
    அ) மோகன்சிங் ஆ) பகத்சிங் இ) சுபாஷ் சந்திரபோஸ் ஈ) கேப்டன் தாசன்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14) விடை தருக:**

தண்மணற் பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின்;
ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்;
பற்றா மாக்கள் தம்முடன் ஆயினும்
செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின்;

12. இப்பாடலின் ஆசிரியர்
    அ) குடபுலவியனார் ஆ) தொல்காப்பியர் இ) சீத்தலைச் சாத்தனார் ஈ) புலவர் குழந்தை
13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்
    அ) பெரியபுராணம் ஆ) மணிமேகலை இ) தொல்காப்பியம் ஈ) இராவண காவியம்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



14. 'செற்றமும் கலாமும்' - இத்தொடரின் பொருள்
அ) பொறாமையும், போட்டியும் ஆ) சினமும் போரும்
இ) மாலையும், மணியும் ஈ) திண்ணையும், பந்தலும்

## பகுதி - II (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:** 4 x 2 = 8
*(21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)*

15. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:
அ) அநீதிகளுக்கும் தவறான செயல்களுக்கும் மனம் ஒப்ப இடம் தருதல் மிகப்பெரிய குற்றமாகும்.
ஆ) முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர் ஜான் பென்னி குவிக்.
16. தாய் நாட்டுக்காக உழைக்க விரும்பினால் எப்பணியைத் தேர்ந்தெடுப்பீர்கள்? ஏன்?
17. அள்ளல் பழனத்தை அரக்காம்பல் வாயவிழ - இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?
18. செப்புத் திருமேனிகள் பற்றிக் குறிப்பு வரைக.
19. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" - குறிப்புத் தருக.
20. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.
21. 'தரும்' - என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:** 5 x 2 = 10
*(28 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)*

22. மலர்விழி வீணை வாசித்தாள்; கேட்டவர் வெள்ளம் போன்ற இன்பத்தில் நீந்தினர்.
(உவமைத் தொடரை உருவகத் தொடராக மாற்றுக)
23. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக:
அ) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்.
ஆ) கொடியிலுள்ள மலரை எடுத்து வா.
24. ஒரு தொடரில் இரு வினைகளை அமைத்து எழுதுக: சேர்ந்து - சேர்த்து
25. கலைச்சொற்கள் தருக: அ) Nautical Mile ஆ) Missile
26. வினையடியை முதல் வினையாகவும், துணை வினையாகவும் அமைத்துத் தொடர்களை உருவாக்குக : வினையடி - எழுது
27. ஆகுபெயரை எடுத்தெழுதுக:
அ) கலைச்செல்வி பச்சை நிற ஆடையை உடுத்தினாள்.
கலைச்செல்வி பச்சை உடுத்தினாள்.
ஆ) எழிலரசி வள்ளுவரைப் படித்தாள்
எழிலரசி வள்ளுவரை ஓவியமாக வரைந்தாள்.
28. ஓங்கிய - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க:** 2 x 3 = 6

29. டோக்கியோ கேடட்ஸ் - குறிப்பு வரைக.
30. இந்திய நீர்ப்பாசனத்தின் தந்தை என அறியப்படுபவர் யார்? அவரைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.
31. பல்லவர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் பற்றி எழுதுக.
32. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:**
பண்பாட்டுத் தொன்மையும், இலக்கிய வளமையும் வாய்ந்தது தமிழர் வரலாறு. இயற்கையைச் சார்ந்தும் பிற உயிர்களோடு இணைந்தும் வாழ்ந்தனர் சங்ககாலத் தமிழர்கள். இதற்குச் சங்க இலக்கியங்களில் ஏராளமான சான்றுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று ஏறுதழுவுதல் நிகழ்வாகும். சங்க கால இலக்கியமான கலித்தொகையில் ஏறுதழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
அ) தமிழர் வரலாறு எத்தகையது?
ஆ) சங்ககாலத் தமிழர்கள் எத்தகைய வாழ்வு வாழ்ந்தனர்?
இ) இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க: 2 x 3 = 6

*(36 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)*

33. பட்ட மரத்தின் வருத்தங்களாகக் கவிஞர் தமிழ்ஒளி கூறும் கருத்துக்களை எழுதுக.
34. "மாகால் எடுத்த முந்நீர் போல" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
35. விதைக்காமலே முளைக்கும் விதைகள் - இத்தொடரின் வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துக்களை விளக்குக.
36. அடிபிறழாமல் எழுதுக:
"கல்லிடைப் பிறந்த ஆறும்" எனத் தொடங்கும் இராவண காவியம் பாடல். *(அல்லது)*
"நீர் இன்று அமையா யாக்கைக்கு" எனத் தொடங்கும் புறநானூறு பாடல்.

பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க: 2 x 3 = 6

37. தற்காலப் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் ஆகுபெயரை எப்படியெல்லாம் பயன்படுத்துகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தருக.
38. அடுக்கிய நோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
39. சொற்பொருள் பின்வருநிலையணி குறித்து எழுதுக.
40. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்! மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல். *- மணிமேகலை*

அ) பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.
ஆ) பாடலில் வந்துள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.
இ) மன்னுயிர்க்கெல்லாம் - இச்சொல்லைப் பிரித்து எழுதுக.

பகுதி - IV (மதிப்பெண்கள் 20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 5 x 4 = 20

41. படம் உணர்த்தும் கருத்தை நயமுற நான்கு தொடர்களில் எழுதுக:



42. உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.
43. உங்களுடைய நாட்குறிப்பில் இடம்பெற்ற ஒரு வாரத்திற்குரிய மகிழ்ச்சியான செய்திகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்துக.

| | |
|---|---|
| திங்கள் | மிக்க நன்றி, மிகவும் மகிழ்ச்சி ஆகிய சொற்றொடர்களை இன்று இரண்டு முறை வகுப்பில் பயன்படுத்தினேன். இதனால் புதிய நண்பர் கிடைத்தார். |
| செவ்வாய் | |
| புதன் | |
| வியாழன் | |
| வெள்ளி | வீட்டிற்குத் தேவையான பொருள்களை நானாக முன்வந்து வாங்கிக் கொடுத்தேன். அம்மா பாராட்டினார். |
| சனி | |

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



44. அ) கவிதையைத் தொடர்க:

அன்னை சொன்ன மொழி
ஆதியில் பிறந்த மொழி
இணையத்தில் இயங்கும் மொழி
ஈடிலாத் தொன்மை மொழி

____________________
____________________
____________________
____________________

*(அல்லது)*

ஆ) "காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின்
மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்
போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடு வாழ்க"

– இப்பாடலில் இடம்பெற்றுள்ள இலக்கியங்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.

45. மொழிபெயர்க்க:

அ) Akbar said, "How many crows are there in this city?". Without even a moment's thought, Birbal replaied "There are fifty thousand five hundred and eighty nine crows, my lord"

"How can you be sure?" asked Akbar. Birbal said, "Make your men count, My lord. If you find more cross it means some have come to visit their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives elsewhere".

Akbar was pleased very much Birbal's wit. *(அல்லது)*

ஆ) மொழிபெயர்க்க: i) Walk like a bull. ii) Love your Food iii) Practice what you have learnt iv) Union is strength

## பகுதி – V (மதிப்பெண்கள் 30)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க:** 5 x 6 = 30

46. அ) இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரை வழி நிறுவுக. *(அல்லது)*

ஆ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

47. அ) ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக. *(அல்லது)*

ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

48. அ) நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துக்கள் யாவை? *(அல்லது)*

ஆ) எங்கள் ஊர்ச்சந்தை – என்னும் தலைப்பில் நாளிதழ்ச் செய்தி ஒன்றை எழுதுக.

49. அ) உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ்–தமிழ்–ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக. *(அல்லது)*

ஆ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்ட கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

50. அ) இயற்கை என்பது உயிர்களுக்குக் கிடைத்த பெரும்பேறு. உயர்ந்தோங்கிய மலைகள், காடுகள், பசுமைப் புல்வெளிகள், நீர்நிலைகள், வயல்வெளிகள், பசுமையான தோப்புகள் என இயற்கையின் கொடைகள் கணக்கிலடங்காதவை. – இக்கருத்துக்களைக் கருவாகக் கொண்டு "நீரின்றி அமையாது உலகு" என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக. *(அல்லது)*

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை ஒன்று எழுதுக:

முன்னுரை – ஆய கலைகள் அறுபத்து நான்கு – சிற்பமென்னும் நுண்கலை – மனித நாகரிக வளர்ச்சி – வரலாற்றின் வாயில்கள் – தமிழர்கள் அழகியலின் வெளிப்பாடு – மன்னர்கள் போற்றிய விதம் – சிற்பக் கலையைப் போற்றிக் காக்க வேண்டிய கடமை – முடிவுரை.

******

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593